மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.03/2024
இன்
அசல் வழக்கு எண்.69/2022
-----

முத்துமுனியம்மாள் .. மனுதாரர்/ வாதி

/எதிர்/

முத்துச்சாமி ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது என் முன்பு 21.07.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P. செல்வக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. விநாயக மூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது 04.12.2023 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து மீண்டும் அசல் வழக்கை கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் 151–ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–**

மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அந்த அசல் வழக்கு நிலுவையில் இருந்து வந்துள்ளது. கடந்த 04.12.2023 ம் தேதி எதிர்மனுதாரர்/பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தது. ஷை வழக்கின் முக்கிய ஆவணம் சார்பதிவாளர்

அலுவலகத்தில் நகல் எடுக்க வேண்டி இருந்ததால் ஷை அசல் வழக்கு சம்பந்தமாக உரிய நேரத்தில் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. அதனால் ஷை தேதியில் மனுதாரருடைய தவறுகையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஷை தேதியில் வழக்கறிஞரை சந்தித்து விபரம் சொல்லாமல் விட்ட செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். எனவே 04.12.2023ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாது போனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாய் உள்ளது. எனவே மனு தாக்கல்.

3) <u>**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணை எதிருரையின் சுருக்கம்**</u>:–

இதனடியில் வியக்கதமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை மற்றும் கற்பனையானவை. அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்திலும், வழக்கை காலம் கடத்துவதற்காகவும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. 04.12.2023ம் தேதி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க

உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், அசல் வழக்கின் முக்கிய ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுக்க வேண்டி இருந்ததால் வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரை உரிய நேரத்தில் சந்திக்க இயலவில்லை என்றும், அதனால் 04.12.2023 அன்று மனுதாரருடைய தவறுகையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணை மனுவில் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்திலும், காலம் கடத்த வேண்டுமென்பதற்காகவும் தாக்கல் செய்துள்ள மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.2.** மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரர்/வாதிக்கு தனது தரப்பை நிரூபணம் செய்வதற்காக ஒரு வாய்ப்பை வழங்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் வழக்கில் கேட்டுள்ள பரிகாரத்தைப் பொறுத்து பார்க்கும்போது வழக்கை மேல்நடத்த மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுவதால் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.03/2024
இன்
அ.வ.எண்.69/2022
**உத்தரவு**
நாள்-06.08.2025.